**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**32**
**Defence**
**Court**

**Name** **: ராஜப்பா என்ற முகம்மது மொய்தீன்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **01.02.2023**

முதல் விசாரணை:

நான் தற்போது தென்காசியில் மவுண்ட் ரோட்டில் குடியிருக்கிறேன். ஓட்டுநராக பணிபுரிகிறேன். நான் 2007 ம் ஆண்டு தென்காசி நகராட்சி 9 வது வார்டு கவுண்சிலராக இருந்தேன். ஆஜர் மற்றும் எதிரிகளை தெரியாது. தமுமுக அமைப்பு உள்ளது என்று எனக்கு தெரியும். அதன் தலைவர், உறுப்பினர்கள் பற்றி எதுவும் தெரியாது. குமார்பாண்டியனை தெரியாது.

எங்கள் ஊரில் இரண்டு குழுக்களுக்கிடையே பிரச்சனை இருந்து வந்தது. அது தொடர்பாக அடிக்கடி தகராறும் ஏற்பட்டு வந்தது. டிசம்பர் -6ம் தேதி பாபர் மசூதி இடிப்புதினம் என்று தெரியும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**</u>:-

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

என்னை 2007ம் வருடம் ஆகஸ்ட் மாதம் போலீசார் விசாரித்தனர் என்றும் அப்போது தமுமுக கட்சியை சேர்ந்தவர்கள் எங்கள் ஊரில் என் மூலமாக ஆம்புலன்ஸ் வாங்கினார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. அதற்கு போட்டியாக குமார் பாண்டியன் ஆம்புலன்ஸ் வாங்கி இயக்க வேண்டும் என்று செயல்பட்டார் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தமுமுக அமைப்பிற்கும் இந்துமுன்னணி அமைப்பிற்கும் விரோதம் இருந்ததாக போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அம்மன் சன்னதியில் இருக்கும் பள்ளிவாசல் கட்டுவதற்காக தமுமுகவினர் முயற்சித்தபோது அதற்கு குமார் பாண்டியன் பல வகையில் எதிர்ப்பு தெரிவித்தார் என்றும் அவர் துண்டுதலில் பள்ளி வாசலை புதுபிக்கப்படுவதற்காக கட்டுமானம் தொடர்பான கோப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்றும் அதற்கு குமார் பாண்டியன் காரணம் என்றும் தமுமுக இயக்கத்தினர் விரோதம் கொண்டிருந்தனர் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. டிசம்பர்-6 பாபர் மசூதி இடிப்பு தினம் என்று தெரியும். அன்று குமார்பாண்டியன் தென்காசி கோவிலில் லட்டு விநியோகம் செய்தார் என்று நான் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் இஸ்லாமியர் சமுதாயத்தினரின் விரோதத்திற்கு ஆளாகியிருந்தார்

என்றால் சரியல்ல. நான் தென்காசி நகர் மன்ற உறுப்பினராக இருந்து வந்தால் எனக்கு மேற்கண்ட விபரங்கள் நன்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் நகர் மன்ற உறுப்பினர் இருந்தவர் என்பதால் எனக்கு தொடர்ச்சியாக அரசியல் தொடர்பு இருப்பதாலும் எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**